**cross**

**O.S. No.256/2017**

**Date: 14.08.2025**

**பி. வா,சா. 1 கோமதி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் என் கணவருக்காக சாட்சி அளிக்கிறேன். எனது கணவர் வங்கியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியர் . 25 வருடம் 7 மாதம் வேலை பார்த்தார். எனது கணவர் நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார். விவசாயம் மற்றும் சைக்கிள் நன்றாக ஓட்டுவார். வழக்கு சொத்திற்கு வடபுறம் கிழமேல் ரோடு உள்ளது. வழக்கு சொத்திற்கு மேல்புறம் எனது கணவர் மாரியப்பன் வீடு உள்ளது. வழக்கு சொத்திற்கு கீழ் புறம் வேலுத்தாய் அவரின் வீடு உள்ளது. வழக்கு சொத்திற்கு தென்புறம் சண்முகையா ஆசிரியரின் வீடு உள்ளது. எனது கணவரின் பெயரின் வீட்டின் சர்வே எண்ணும் வாதி சொத்தின் சர்வே எண்ணும் 866/2 என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது கணவரின் பெயரின் வீட்டின் சர்வே எண்ணும் எனக்கு ஞாபகத்தில் இல்லை. வழக்கு சொத்தினுள் வாதியின் வீடும் தென் கிழக்கு முனையில் இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு வலது பக்க வாசல் என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு வடபுறமும், மேல்புறமும் வாதிக்கு பாத்தியப்பட்ட காலிமனை உள்ளது என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு மேல்புறம் உள்ள காலி மனையில் மோட்டார் போட்டு தண்ணீர் எடுத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி காலி மனையில் வாதி பூச் செடியும் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய மரங்கள் தான் உள்ளது. என்னுடைய வீட்டிற்கு வடபுறம் கிழமேல் ரோடு உள்ளது. என் கணவர் வீடு கட்டியுள்ள இடத்தை காத்தப்பதேவர் என்பவரிடம் இருந்து 1989

ம்வருடம் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி 6 செண்டிற்கு மேல்புறம் உள்ள 4 3/4 செண்ட் இடத்தை தங்கப்பாண்டியன் என்பவர் கிரயம் பெற்றுள்ளார் என்றால் மேற்படி 6 செண்ட் இடத்திற்கு கீழ்புறம் 4 3/4 செண்ட் இடம் உள்ளது. மேற்படி பி.வா,.சா. ஆ, 1 மற்றும் பி.வா,.சா. ஆ, 2 ஆவணங்களில் கண்ட கிரயம் பெற்ற பின்பு தான் மொத்தமாக மேற்படி இரு ஆவணத்தில் கண்ட சொத்திலும் சேர்ந்து 1994 ம் வருடம் வீடு கட்டியுள்ளேன். மேற்படி வீடு வங்கியில் கடன் பெற்று கட்டியு(5) ள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு அசல் ஆவணங்கள் என்னவானது என்றால் வங்கியில் கடன் வாங்கும் போது வங்கியில் கொடுத்து விட்டேன். மேற்படி வீடு கட்டும் போது பஞ்சாயத்தில் கட்டிட உரிமம் வாங்கி தான் கட்டினேன். மேற்படி கட்டிட வரைபடம் என்னிடம் தான் உள்ளது. கட்டிட வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலமா என்றால் தாக்கல் செய்யலாம். மேற்படி இரண்டு ஆவணங்களில் கண்ட கீழ் பக்க எல்கையில் எனது கீழ்பக்க சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சுவருக்கு கீழ்புறம் 10 அடி தள்ளி தென்னைமரம் வைத்துள்ளேன். நான் தாக்கல் மறுப்புரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கு மேல்பக்க தென் மடல் சுவரை அதற்கு மேல்புறம் உள்ள காலிமனையாக வந்து தான் பூசி வெள்ளை அடித்து அனைத்து பராமரிப்பு வேலைகளையும் செய்வேன் என்றால் சரிதான். எனது வீட்டின் மழை தண்ணீர் மேல்பக்கம் உள்ள காலிமனையில் விழுகிறது என்றால் சரியல்ல தெற்கு பக்கம் விழுகிறது. எனது வீட்டின் மழை தண்ணீர் மேல்பக்க காலிமனையில் விழுகிறது அதை ஒத்துக்கொண்டால் வழக்கிற்கு பாதகமாக விளையும் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்கூறிய எனது தரப்பு இரு ஆவணங்களில் கண்ட 4 மால்களையும் படித்து காண்பித்து கேள்வி

கேட்டால் சொல்ல தெரியாது. பி.வா. சா. ஆ 1 ல் கண்ட கிரய ஆவணத்தில் கண்ட 6 செண்டு நிலத்திற்கு அடுத்த மேல்புறம் தான் பி.வா. சா. ஆ 2 ல் கண்ட சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பி.வா. சா. ஆ 2 ல் கண்ட சொத்து பி.வா. சா. ஆ 1 ல் கண்ட சொத்திற்கு மேல்புறத்தில் இருந்ததாக 4 மால்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 4 3/4 செண்ட் இடம் 6 செண்ட் இடத்திற்கு கீழ்புறம் இருப்பதாக சாட்சி அளித்தது தவறு என்றால் ஆவணத்தில் மேல்புறம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து வழக்கு சொத்தை சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் அளவின் போது நானும் எனது கணவரும் இருந்தோம் என்றால் சரிதான். வழக்கு சொத்து மற்றும் எனது இடம் ஆரம்பத்தில் 1 1/2 ஏக்கர் நிலமாக இருந்நது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இடத்தை 1 1/2 ஏக்கரை மேற்கு அத்தத்திலிருந்து அளவீடு செய்தார்கள் என்றால் முதலில் மேற்கு பக்கம் அளந்தார்கள் பின்பு கிழக்கு பக்கம் அளந்தார்கள். மேற்கூறியவாறு அளவீடு செய்யும் போது எனது வீட்டிற்கு கீழ்புறத்தில் 2 அடி காலிமனையுடன் எனது இடத்தின் அளவு முடிந்து விட்டதாக கூறினார்கள் என்றால் சரியல்ல. எனது வீட்டின் மேல்பக்க சுவரிலிருந்து கீழ்பக்க சுவர் வரை எத்தனை அடி உள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. எனது வீட்டின் வடபக்க சுவரிலிருந்து தென் பக்க சுவர் வரை எத்தனை அடி என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது. எனது வீட்டின் தென்மடல் மற்றும் கிழமேல் அளவுகளை அளவீடு செய்து நீதிமன்ற ஆணையரிடம் முயற்சி எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எனது வீட்டின் மேல் பக்க சுவரிலிருந்து கீழ் பக்க சுவர் வரை எத்தனை அடி நீளத்தில் நான் கட்டுமானம் கட்டியுள்ளேன் என்று நீதிமன்றத்திற்கு தெரிந்தால் தான் மேற்படி கீழ்பக்க சுவருக்கு கிழக்கு பக்கம் எத்தனை அடி காலி மனை எனக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியவரும் என்றால் சரிதான். எனது வீட்டின் மேல் பக்க சுவரிலிருந்து கீழ்பக்க சுவர் வரை எனக்கு பாத்தியப்பட்ட 10 3/4 செண்டுக்கான அளவு இருந்து வருகிறது அதை அளவீடு செய்து நீதிமன்ற ஆணையரிடம் காண்பித்தால் உண்மைநிலவரம் நீதிமன்றத்திற்கு தெரிந்து விடும் என்பதற்காக அளந்த காண்பிக்கபடவில்லை என்றால் சரியல்ல. பி.வா, சா, ஆ, 1 மற்றும் பி,வா, சா, ஆ, 2 கிரய ஆவணங்கள் எனது திருமண காலத்திற்கு முன்பே எனது கணவரால் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா, சா, ஆ, 1 மற்றும் பி,வா, சா, ஆ, 2 ல் கண்ட சொத்து வாங்கப்பட்ட விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு நேரிடையாக தெரியாது என்பதால் மேற்படி கிரய ஆவணத்தில் கண்ட சர்வே எண் மற்றும் 4 மால்கள் எனது கணவரிடமோ அல்லது எனது கணவருக்கு விற்பனை செய்தவர்களிடம் கேட்டால் தான் தெரியவரும் என்றால் சரிதான். பி.வா, சா, ஆ, 1 மற்றும் பி,வா, சா, ஆ, 2 ஆவணங்களில் கிழமேல் தென் மடல் நீளங்கள் அகலம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதி எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி கிரயம் வாங்கிய கிரய ஆவணம் பற்றி கேள்வி கேட்டால் எனக்கு சொல்ல தெரியாது. வாதி அவரது சொத்துக்களை கிரயம் பெற்ற ஆவணங்களை பற்றி என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் கண்ட சங்கதிகளை நான் தான் கூறினேன். மேற்படி எதிர் வழக்குரையில் கண்ட சங்கதிகளுக்கு நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சி அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. வழக்கில் கண்ட 2ம் பிரதிவாதி எனது நெருங்கிய உறவினர். 2ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு முதல் வாய்தாவிற்கு வரும் போது எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று நீதிமன்றத்தில் கூறிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது நெருங்கிய உறவினர் என்றாலும் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கு நடத்தினால் எனது வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதற்காக நானும் எனது கணவரும் 2ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் வழக்கிற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று கூற சொன்னோம் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்க தக்கது என்றால் சரியல்ல.